பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர் 19 கார்த்திகை 23 ஜுமாஹஜ் 26 இதழ் 298

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 8-12-77

கொள்ளை முயற்சி தோல்வி:

## வீட்டுக்காரரை கத்தியால் குத்திய 'பெல்பொட்டம்' கோஷ்டி

[யாழ்ப்பாணம்]

இரவு வேளையில் வீடொன்றிற்குள் கொள்ளை நோக்குடன் நுழைய முயன்ற நால்வர் அடங்கிய வாலிபர் கோஷ்டி ஒன்று, தமது முயற்சி தோல்வியடையவே வீட்டுக்காரரைக் கத்தியால் குத்திப் படுகாயப்படுத்தி விட்டு ஓடிவிட்டதாம்!

திகிலூட்டும் இச்சம்பவம் கைதடி மத்தியில் நடைபெற்றுள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸ் சார்ஜன்ட் என். குகதாசன் இது பற்றி நடத்திவரும் விசாரணைகள் மூலம் தெரியவருவதாவது:

விஸ்வலிங்கம் என்பவரது வீட்டுக்குள் நேற்று முன்தினம் இரவு 10-30 மணியளவில் நால்வர் அடங்கிய பெல்பொட்டம் வாலிபர் கோஷ்டி ஒன்று கொள்ளையடிக்கும் நோக்குடன் புக முயன்றதாம்.

அந்த நேரம் வீட்டுக்காரருக்கும் அவர்களுக்கும் இடையில் இழுபறி ஏற்பட்டதாம்.

அவ்வேளை கொள்ளையர்கள், அவரைக் கத்தியால் குத்திக் காயப்படுத்தினராம்.

வீட்டுக்காரரின் மனைவி சிவபாக்கியத்துக்கும் சிறு காயம் ஏற்பட்டதாம்.

வீட்டுக்காரர்கள் அபயக் குரல் எழுப்பியதைத் தொடர்ந்து அயலவர்கள் திரளவே, கொள்ளையர்கள் தப்பியோடி விட்டனர்.

விஸ்வலிங்கம் யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [உ]

# வடக்கு-கிழக்கில் தமிழ் ஊழியர் அதிக அளவில் நியமனம்

### டாக்டரைத் தாக்கிய வழக்கு

[யாழ்ப்பாணம்]

டாக்டர் எஸ். வெற்றிவேலுவையும் அவரது மனைவியாரை

6.ம் பக்கம் பார்க்க

## பேரவையில் பொது நிர்வாக அமைச்சர் தகவல்

சிற்றூழியர் பற்றி 'அமிர்' பிரஸ்தாபம்

(கொழும்பு)

தமிழ்ப்பிரதேசங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொது நிர்வாக சேவையில், அதிக அளவு தமிழ்ஊழியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று பொதுநிர்வாக, உள்நாட்டு அமைச்சர் திரு. மொண்டேகு ஜயவிக்கிரம நேற்று பேரவையில் தெரிவித்தார்.

தேசியஅரசுப்பேரவையில் நடைபெற்ற பொதுநிர்வாகம், உள்நாட்டு அமைச்சின் நிதிஒதுக்கீடுபற்றிய குழுநிலை விவாதத்தில் பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

''நிர்வாகத்தை பிரதேச ரீதியில் பரவலாக்க நடவடிக்கை எடுத்துள்ளேன். குறிப்பாக ஒவ்வொரு மாவட்டத்திலும் சேவையாற்றும் அரசாங்க அதிபர்கள் நான்கு ஆண்டுகள் சேவையாற்றவும், உதவி அரசாங்க அதிபர்கள் ஐந்து வருடங்கள் சேவையாற்றவும் அனுமதிக்கப்படுவர். மாவட்டங்களை விஸ்தரிப்பதற்காக விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழு தனது அறிக்கையில் 22 மாவட்டங்களை 28 ஆக அதிகரிக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது'' என்று அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில், '65ம் ஆண்டுபதவிக்கு வந்த தேசிய அரசாங்கம், சிற்றூழியர்களுக்கும், 56ம் ஆண்டுக்கு முற்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கும் சிங்கள மொழித்தேர்ச்சி அவசியமில்லை என்று சட்டமியற்றியது இதை முன்னைய அரசுரத்துச் செய்துவிட்டது. இதை மீண்டும் அமுல்செய்து இவர்களுக்கு சம்பள உயர்வையும் பதவி உயர்வையும் வழங்க வேண்டும். கடந்த ஆகஸ்ட் மாத இனக்கலவரத்தில்பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களில்

6 ம் பக்கம் பார்க்க

### 68 தடவைகள் ஒலித்த பெயர்!

[கொழும்பு]

தகவல், ஒலிபரப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுசம்பந்தமான [குழுநிலை] விவாதம் நேற்றுத் தேசிய அரசுப் பேரவையில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அரசாங்கக் கட்சி அங்கத்தவர் ஒருவர்;

''கடந்த அரசாங்கத்தின் காலத்தில், முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பெயர் ஒரு நாள், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் [வானொலியில்] அறுபத்தெட்டுத் தடவைகள் ஒலித்தது'' என்று குரல் கொடுத்தார்! [ம]

## தமிழர் கூட்டணிக்கு பிரதமர் பாராட்டு

கொழும்பு[

''தமிழர் விடுதலைக் கூட்டணியினர், தேசிய அரசுப் பேரவைக்கு வந்து, தமது பணியைச் சிறப்பாக ஆற்றுவதையிட்டு நான் பெரிதும் பாராட்டுகின்றேன்'' என்று நேற்று முன்தினம் தேசிய அரசுப் பேரவையில் உரை நிகழ்த்திய பிரதம மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியபோது ''சுதந்திரக் கட்சியினர் மக்களால் தெரிவுசெய்யப்பட்டுப் பேரவைக்கு அனுப்பப்பட்டிருந்தும் விவாதங்களில் கலந்து கொள்ளாமல் இருக்கின்றனர். அவர்கள், தாம் கலந்துகொள்ள விரும்பவில்லை என்று தெரிவித்தால், நான் இச்சபையைக் கலைத்துவிட்டு வேறு கருமம் செய்வேன்'' என்றார். [ம]

## இலங்கை வானொலி புதிய வடிவம் பெறும்

—அமைச்சர் விஜயதுங்கா

(கொழும்பு)

"இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனத்தை அரசியல்கட்சிகள் தங்களின் பிரச்சார மேடையாகப் பயன்படுத்த முடியாது' என்று தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. டி. பி. விஜயதுங்கா நேற்று பேரவையில் திட்டவட்டமாக அறிவித்தார்.

தகவல், ஒலிபரப்பு அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு குழுநிலை விவாதத்துக்கு அமைச்சர்பதிலளிக்கையில், ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் தொடர்பாக விசாரணைகள் நடத்திவரும் எக்கநாயக்கா ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் இலங்கைவானொலி புதிய வடிவம்பெறும் என்றுகூறினார்]

'வானொலியில் எதிர்க்கட்சிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும். செய்திகளில் பாகுபாடு காட்டப்படமாட்டாது. இ. ஒ. கூட்டுஸ்தாபனத்தில் கடமையாற்றிய 8 பேர் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளனர். உரியநடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் 40 ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பிவைத்திருக்க முடியும். பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப்படும். எந்தவிதமான கட்டுப்பாட்டையும் பத்திரிகைகள் மீது கொண்டுவரமாட்டோம்,' என்று அமைச்சர் கூறினார் [ம]

பங்கீட்டரிசிப் புத்தகம்:

## மதிப்பீடு செய்வதில் சிறிய மாற்றம்

(கொழும்பு)

பங்கீட்டரிசிப் புத்தகங்களை ரத்துச்செய்வது அல்லது புதுப்பிப்பது தொடர்பான மதிப்பீடு செய்யும் திட்டத்தில், மாற்றம் செய்யப்பட்டுள்ளது:

''பங்கீட்டரிசிப் புத்தகங்களை ரத்துச்செய்வது அல்லது புதுப்பிப்பது சம்பந்தமான விபரங்களை அறிந்துகொள்ள [முன்னர் அறிவிக்கப்பட்டது போல] அதிகாரிகள் உங்கள் வீடுகளுக்கு வரமாட்டார்கள். வீட்டின் பிரதம குடியிருப்பாளர் அல்லது அவரது அதிகாரம்பெற்ற பிரதிநிதிஒருவர்' உங்களுக்குரிய கூட்டுறவுக் கடைக்கோ அல்லது கிளைக்கோ அல்லது அங்கீகாரம் பெற்ற விநியோக ஸ்தாபனத்துக்கோ சென்று இதுசம்பந்தமான பத்திரங்களை இம்மாதம் 12ம் திகதி முதல் 18ம் திகதிவரை பெற்றுக் கொள்ளலாம்; பின்னர் இந்தப் பத்திரத்தை சரியானமுறை

6-ம் பக்கம் பார்க்க

அனுராதபுரம்

## விவேகானந்தாவை மீண்டும் திறக்க முயற்சி

[யாழ்ப்பாணம்]

நாட்டில் ஏற்பட்ட இனக் கலவரத்தைத் தொடர்ந்து இதுவரை மூடப்பட்டிருந்த அநுராதபுரம் விவேகானந்த தமிழ் மகாவித்தியாலயத்தை மீளவும் பழைய மாதிரி இயங்கவைப்பதற்கு உரிய பூர்வாங்க முயற்சிகளில் இப்பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும் இறங்கியுள்ளனர்.

இம்மாதம் 9, 10, 11ந் திகதிகளில் இது தொடர்பாக மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கைகளில் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் இத் திகதிகளில் பாடசாலை அதிபருடன் தொடர்புகொள்ளுமாறு இப்பாடசாலை அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியம் வேண்டுகோள் விடுத்துள்ளார். [இ. அ]

சென்னை துப்பாக்கிச்சூடு

## 31-ம் திகதி விசாரணை தொடங்கும்

சென்னை, டிச. 7

அக்டோபர் 30-ம் திகதி சென்னையில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்யும் பொருட்டு தமிழ்நாடுஅரசினால் நியமிக்கப்பட்ட சோமசுந்தரம் விசாரணைக் கமிஷன் இம்மாதம் 31-ம் திகதி சாட்சியங்களைப் பதிவுசெய்யத் தொடங்கும்.

திருமதி இந்திராகாந்தி சென்னைக்கு வந்தபோது தி.மு.க. வினரின் எதிர்ப்புப் போராட்டம் நடந்தது. அப்போது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். மூவர்பலியானார்கள். இத்துப்பாக்கிச் சூடு சம்பந்தமாக விசாரணை நடத்தும் தனிநபர் கமிஷன் 'துப்பாக்கிப்பிரயோகம்நியாயமானதுதானா? தவிர்க்கமுடியாததா? அத்துமீறல் நிகழ்ந்ததா? துப்பாக்கிப்பிரயோகம் நடத்துவதற்குரிய சூழ்நிலை அப்போது இருந்ததா?' இது போன்ற விபரங்களை அறிந்து கொள்ளும்;

## சிறப்புக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய கூட்டுறவு ஊழியர் சம்மேளனச் சிறப்புப் பொதுக் கூட்டம் இம் மாதம் 11ம் திகதி ஞாயிறு காலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற விருக்கிறது.

திரு.எஸ். கே. திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெற விருக்கும் இக் கூட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. எஸ். ஜெயகாந்தன், ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு.எஸ். கந்தையா, திரு.வி.பொன்னம்பலம், திரு.இ.பேரின்பநாயகம், மற்றும் திருவாளர்கள் சோ. அருணகிரி, இ.நாகேந்திரம், எஸ். சிற்றம்பலநாதன் ஆகியோர் உரையாற்றுவர்.

[திருநெல் அ]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. ஈடு. 14995

1. சந்திரசேகரம் ஐயர் முத்துச்சுவாமி-குருக்கள் கைம்பெண் கல்யாணி அம்மா, சோதிடநிலயம், காரைநகர் வடக்கு.

வழக்காளி

எதிராக

1. கணபதி ஐயர் கனகசபாபதிக் குருக்கள்
2. பெண் அழகம்மாவும்
இருவரும் முரசுமோட்டை, கிளிநொச்சி.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் ஈடு 14995-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு மார்கழி மாதம் 30-ந் திகதி (30-12-77) முற்பகல் 12 மணிக்கு அக்காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 6884-00 இன்னும் ரூபாய் 3500/-க்கு 15-8-75 தொடக்கம் 16-5-77 வரைக்கும் வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 10 வித வட்டியும் அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 9 வித வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 608-55 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் கரைச்சிப்பகுதி கரைச்சி கோவிற்பற்று முரசுமோட்டை இறை ''கோரை மோட்டை'' நெ, பர. 134. எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை முருகருக்காகிய ஆதனம், வடக்கு வேலாயுதம் அருணாசலத்துக்கும், வேதாரணியர் சிதம்பரநாதருக்கும் உரிய ஆதனங்கள், மேற்கு வேதாரணியர் சிதம்பரநாதருக்கும் குமாரவேலு இராசையாவுக்கும் உரிய ஆதனங்கள், தெற்கு சாமுவேல் கைம்பெண் சூசை நேசம்மாவுக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனங்கள். இவ்வெல்லை வயற்காணி அடங்கலும். முற்பதிவு L 2/291.

ப நா. தருமலிங்கம்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

167/1, கோவில் வீதி,
நல்லூர். 7866.

## கோட்டுக் காணி விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

வழ/இல/ஈடு/13325

1. சிற்றம்பலம் கந்தையா
2. கந்தப்பு சுப்பிரமணியமும்
3. பெண் சிவக்கொழுந்துவும்
அராலி தெற்கு, அராலி.

வழக்காளிகள்

எதிராக

1. மாரிமுத்து பொன்னுத்துரையும்
2. பெண் சிவயோகமும்
3. மாரிமுத்து சிதம்பரநாதனும்
4. பெண் தவமணியும் எல்லோரும்
சித்தங்கேணி கிழக்கு, வட்டுக்கோட்டை.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றின் ஈட்டு/வழ/இல/13325ல் எனக்குக் கொடுபட்ட கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகளை முறையே 1-ம், 2-ம் காணிகளுக்குள் நின்று 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ந் திகதி புதன்கிழமை (28-12-1977)ல் முற்பகல் 10 மணி தொடக்கம் என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

ரூபா 12225/-ம் 28-8-1972 தொடக்கம் 9-7-1973 வரைக்கும் ரூபா 9000/-க்கு 10 வித வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வித் வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 499/61 சதமும்.

### ஆதனவிபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று அராலி தெற்கிறை ''மக்கவளவும் தன்னைப்பட்டி அடைப்பும்'' நி. பர. 5 1/2ம் தென்னைகளும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கும் மேற்கும் ஒழுங்கைகள், வடக்கு ரோட்டு, தெற்கு சேனாதிராசா பெண் செல்வலட்சுமிக்கும், கந்தசாமி மகள் மகேஸ்வரிக்குமுரிய ஆதனங்கள் இதடங்கலும். பதிவு ஈ. 423/150.

2. மேற்படி அராலி தெற்கு இறை ''கினியம்புத்தினி'' நெற் பர. 27 இதில் வடக்குப்பக்கமாக நிந்தமான நெ-பர 20. எல்லை கிழக்கு வாய்க்கால், வடக்கு யோகம்மா துரைப்பிள்ளைக்கும் கந்தையா பெண் அம்பிகைப்பிள்ளைக்குமுரிய ஆதனங்கள், மேற்கு அப்புக்குட்டி துரைரத்தினத்தினுதனம், தெற்கு மிகுதியாதனம் இதடங்கலும். பதிவு ஈ. 423/151.

க. சரவணமுத்து,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

38/1, சோமசுந்தரம் அவென்யூ,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்,
15-11-77. 7857

## காங்கேசன்துறைப் பட்டினசபை

### ஒப்பந்தகாரர்களைப்

# பதிவு செய்தல் 1978

பின்வரும் சேவைகளை செய்து வழங்குவதற்கு இப்பட்டினசபையோடு தம்மைப்பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரசித்தி பெற்ற ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்கும் ஒவ்வொரு ஒப்பந்தகாரரும் தான் ஒரு ஒப்பந்தகாரர் என்பதற்குரிய அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி ஒன்றையும், இவ்வாறான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாகச் செய்து வழங்கியுள்ளதாக, தாம் வேலைகளைச் செய்துகொடுத்த அரசாங்கத் திணைக்களம், உள்ளூராட்சி மன்றம், கூட்டுத்தாபனம் அல்லது பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் தலைவர்களிடமிருந்து பெற்ற சான்றுப்பத்திரத்தின் பிரதி ஒன்றையும், தமது விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பத்தைக்கொண்டுள்ள காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்தல்-1978'' எனக் குறிப்பிடப்பட்டு 21-12-1977-ந் திகதியன்றோ அதற்கு முன்னராகவோ எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவேண்டும்.

இதற்கு முன்னர் இச்சபையுடன் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களும் இச் சேவைகளை செய்து வழங்க விரும்பின் அவர்களும் தமது விண்ணப்பங்களை மேற்குறிப்பிட்டவாறு (இவர்களுக்கு சான்றுப்பத்திரப் பிரதிகள் தேவையில்லை) எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும்.

### வழங்கும் சேவைகள்

1. கட்டிடங்களைப் பழுது பார்த்தலும் பேணலும்
2. மோட்டார் வாகனங்களை (ராக்டர், ரெயிலர், தண்ணீர்த்தாங்கி) நன்னிலையில் வைத்திருத்தலும், பழுதுபார்த்தலும்.
3. தோட்டி வேலைக்கான வண்டிகளுக்கு கொண்டு செல்வதற்குரிய ஏனைய உபாயத்துக்கு ஏற்பாடு செய்தல்.
4. தளபாடம், அலுவலக உபகரணங்கள் முதலியன பழுதுபார்த்தல்.
5. வீதிகள், ஒழுங்கைகள், தெருக்கல் பழுது பார்த்தல்.
6. வீதிகள், ஒழுங்கைகள், தெருக்கள் அமைத்தல்.
7. பக்கக்கான், வடிகால் முதலியன பழுது பார்த்தலும் பேணலும்
8. பக்கக் கான் அமைத்தல்.
9. அணைச்சுவர் பழுது பார்த்தலும் பேணலும்.
10. அணைச்சுவர் கட்டுதல்.
11. மோட்டார் வாகனம் (ராக்டர்) சபையின் சேவைக்கு வாடகைக்கு வழங்குதல்.

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் திரலில் இருந்தே வழக்கமாகக் கூறுவிலைகள் கோரப்படும். எனினும் அவசியமாகக் காணும் பட்சத்தில் வேறு ஒப்பந்தகாரர்களிடமிருந்து விலைகளைக் கோரி சேவைகளைச் செய்விக்கும் உரிமை எனக்கு உண்டு வேண்டப்படும்போது விலைகளைச் சமர்ப்பிக்க அல்லது ஒப்பந்தம் செய்யப்பட்டு உரிய காலத்தில் செய்து வழங்கத் தவறும் அல்லது செய்து வழங்கப்பட்ட சேவைகள், பொருட்கள் விபரக்கூற்றுகளுக்கு அல்லது மாதிரிகளுக்கு அமையாதனவாய் இருக்கின்ற ஒப்பந்தகாரர்களின் பதிவுகள் அறிவித்தல் இல்லாது பதிவேட்டிலிருந்து நீக்கஞ்செய்யப்படும்.

ஒப்பம்
க. சண்முகநாதன்,
விசேட ஆணையாளர்,
பட்டினசபை,
காங்கேசன்துறை.

பட்டினசபை அலுவலகம்,
காங்கேசன்துறை,
06-12-1977. 7867

## வரி விளம்பரம்

### தேவை

தமிழில் கணக்கு எழுதுவதிலும், ஆங்கிலம், ஆங்கில, தட்டெழுத்தில் தேர்ச்சியுள்ள ஒரு பெண்ணும், பிடவை வியாபார அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. காலை 9-06 முதல் 11-00 வரையில் நேரில் வரவும். விபரங்களுக்கு: க. நாகமுத்து அன் சன்ஸ், 48—50, பெரிய கடை, யாழ்ப்பாணம். 7862

### விற்பனைக்கு

சாவகச்சேரி நுணுவில் கிழக்கு வளவில் வீதியில் கல்வீடும், வளவும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: பண்டாரி செல்லத்துரை, புதுக்குளம், முரசுமோட்டை, பரந்தன். 7860

# நெல் ஓவியத்தில் மூதறிஞர் செல்வா

## சென்ஜோன்ஸ் கல்லூரியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது

[யாழ்ப்பாணம்]

மூவகையான நெல் மணிகளை மட்டும் கொண்டு அச்சுவேலியைச் சேர்ந்த ஓவியரான துரைசிங்கம் துரைரத்தினத்தின் கைவண்ணத்தில் உருவான மூதறிஞர் செல்வாவின் திருவுருவம் பரி. யோவான் கல்லூரியில் மக்களின்பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது உலகப்புகழ்பெற்ற ஓவியர்கள் பிக்காஷோ, லியட் டோவின்சி, பி. மகாதேவன் போன்றவர்கள் மாபெரும் மதிய பொருட்களைக் கொண்ட தம்து படைப்புக்களைப் படைத்தனர், வளர்ந்து வரும் இவ்விளங் கலைஞர் நெல் போன்ற உயிர்ப் பொருளான எளிமையான பொருட்களை நிலைக்களனாக கொண்டு தம்து கலைத்திறனை வெளிப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

நேற்றுத் தொடக்கம் இந்த நெல்ஓவியம் அடுத்தமாதம் 7-ம் திகதி வரை இக்கல்லூரியில் காட்சிக்கு வைக்கக் கல்லூரி அதிபர் ஏற்பாடு செய்துள்ளார். ஓவியத்தைப்பார்வையிட விரும்புபவர்கள் கல்லூரி நூல்நிலையத்தில் இதனைப்பார்வை யிடலாம் எனக் கல்லூரி அதிபர் திரு ஆனந்தராஜா தெரிவித்தார். [அ]

# ''முதல் மொழிமட்டுமே கட்டாய பாடம்''

## பிரதி கல்வி அமைச்சர் தகவல்

(கம்பளை)

''அடுத்த வருடம் நடைபெறும் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில், முதல் மொழிமட்டுமே கட்டாய பாடமாக இருக்கும். என்றுகம்பளைக்குவிஜயம்செய்த கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன ஆசிரியர்கள் மத்தியில் உரையாற்றுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''எதிர்காலத்தில் கடுமையாக உழைப்பவர்கட்கே பதவியுயர்வு வழங்கப்படும். ஒரு மாவட்டத்தில் தொடர்ச்சியாக 5 வருடங்கள் சேவையாற்றியவர்கள்மட்டுமே இடமாற்றம் பெறத் தகுதியுடையவர்கள்.

''இப்போது தேசிய உயர் சான்றிதழ் வகுப்பில் இருக்கும் அனைவரும் க. பொ. த. (உயர் தரம்) பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவார்கள். அவர்களில் தகுதியானவர்கட்கு பல்கலைக் கழகப் படிப்பு வசதியும் ஏனையோருக்கு வேலைவாய்ப்புப் பெறுதலில், முதலிடமும் அளிக்கப்படும்.

### கிழக்கிலும் தெற்கிலும் வளாகங்கள்

வந்தாறுமூலையிலும், மாத்தறையிலும் அடுத்த வருட முற்பகுதியளவில் இரண்டு வளாகங்கள் ஆரம்பிக்கப்படும். கல்வி அதிபதிகள் காரியாலயங்களிலே அடைபட்டுக் கிடக்காது பாடசாலைகட்கு விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிடவேண்டும்.''

மாணவர்களுக்கு இங்கிலாந்து உயர் பரீட்சைகளில் தோற்ற வசதியும் செய்துதரப் படுமென்றும் கல்வி அமைச்சர் உறுதி அளித்தார்.

## விக்ரோறியா கல்லூரியின் வெற்றிகள்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை வட்டாரப் பாடசாலைகளினிடையே நடைபெற்ற சங்கீத, நடனப் போட்டிகளில் முதலிடம் பெற்ற விக்ரோறியாக் கல்லூரி மாணவிகள், வடமாநில சங்கீத சபையினர் நடத்திய நடனப் போட்டியில் மூன்றும் இடத்தையும், சங்கீதப் போட்டியில் நான்காம் இடத்தையும் பெற்றனர்.

வட்டுக்கோட்டை வட்டாரப் பாடசாலைகளின் ஐ. நா. சபை தமிழ், ஆங்கில, பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் முதலிடத்தைப் பெற்று, யாழ். மாவட்ட பாடசாலைகள்ரீதியில் நடந்த போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட இக் கல்லூரி மாணவர்களான செல்வி செல்வத்துரை சுவாஞ்சலின், செல்வன் சுந்தரலிங்கம் சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். செல்வி செ. சுவாஞ்சலின் ஆங்கில கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் இரண்டாம் இடத்தையும், செல்வன் சு. சுரேந்திரன் தமிழ்பேச்சுப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் தட்டிக்கொண்டனர். (இ)

# "கெய்ரோ மாநாட்டில் சகல அரபுநாடுகளும் கலந்து கொள்ளும்"

## அமெரிக்க வெளிநாட்டமைச்சர் நம்பிக்கை

வாஷிங்டன், டிச.7

கெய்ரோவில் நடைபெற உள்ள மத்திய கிழக்கு சமாதான மகாநாட்டில் சகல அரபு நாடுகளும் கலந்து கொள்ளும் எனத்தாம் நம்புவதாக அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ் லான்ஸ் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ், மத்திய கிழக்கு ஆகிய நாடுகளுக்கான விஜயத்தை ஆரம்பிக்குமுன் திரு.வான்ஸ் வாஷிங்டனில் பத்திரிகையாளர் மத்தியில் உரை நிகழ்த்தினர்.

மத்திய கிழக்கு விவகாரம் குறித்த அடிப்படை அம்சங்கள் குறித்து அடுத்த வாரமே இஸ்ரேலுக்கும் எகிப்துக்குமிடையில் உடன்பாடு ஏற்பட்டு விடும்என்றுதாம் நம்புவதாகவும் தெரிவித்த திரு. வான்ஸ் இம் மகாநாட்டுக்கான சகல ஒத்துழைப்பையும் வழங்க அமெரிக்கா தயாராக உள்ளது என்றும்கூறினர். [இ]

# மந்திரிசபை அனுமதியின்றி அவசரநிலை பிரகடனம்

## ஜனதிபதிக்கு எழுதிய பரமஇரகசியக் கடிதம் பற்றியும் ஷாகமிஷன் முன் பிரஸ்தாபம்

புதுடில்லி, டிச. 7

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி 1975ம் ஆண்டு ஜூன் 25-ம் திகதி தமது அமைச்சரவையின் அனுமதியின்றியே அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்துமாறு ஜனதிபதி ஜனப் பக்ருதீன் அலிஅகமத்திற்கு சிபார்சு செய்திருந்தார்.

இதுதொடர்பாக அப்போது ஜனதிபதியாக இருந்த ஜனப் பக்ருதீன் அலி அகமத்துக்கு "பரம இரகசியம்" என்று குறிப்பிட்டிருந்த கடிதம் ஒன்றை திருமதி காந்தி அனுப்பியிருந்தார். அக்கடிதத்தில் அவசரகால நிலைப்பிரகடனம் குறித்து பல இரகசியத் தகவல்கள் எழுதப்பட்டிருந்தன.

அவசரகால நிலையின்போது இடம்பெற்றதாகக்கூறப் படும் முறைகேடான செயல்கள் பற்றி விசாரணைசெய்து 'ஷா' கமிஷன் முன்னிலையிலேயே இவ்விபரங்கள் தெரிவிக்கப்பட்டன.

அவசரகாலநிலை அமுல் செய்யப்பட்டதற்கு மறுநாள் நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்திலேயே அவசரகாலநிலை அமுல்பற்றி அமைச்சர்களுக்குக் கூறப்பட்டதாகவும் கமிஷன்முன் முன்னள் அமைச்சர்கள் சிலர் தெரிவித்தனர்.

திருமதி காந்தியின் சிபார்சின்படி அந்த அவசரகால உத்தரவில் கைச்சாத்திடுவது இந்திய அரசியல் சாசனத்திற்கு முரணனது என்று ஜனதிபதியின் செயலாளராக இருந்த திரு. பாலச்சந்திரன் ஜனதிபதிக்குக் கூறியதாகவும் அதே வேளையில் திருமதி காந்தியின் அந்தரங்கச் செயலாளர் திரு. ஆர்.கே. புலன் நேரில் சென்று ஜனதிபதியிடம் அவசரகால உத்தரவில் கையொப்பம் வாங்கியதாகவும் நேற்று கமிஷன்முன் தெரிவிக்கப்பட்டது. (இ)

## கருணநிதிக்கு விடுதலை இன்றேல் தீக்குளிப்பாராம்

சென்னை, டிச. 7

கலைஞர் கருணநிதியையும் தி. மு. க. தலைவர்களையும் விடுதலை செய்யாவிடின், தாம் தீக்குளிக்கப்போவதாக பொலிசாருக்கு அறிவித்த ஒருவர் பொலிசாரினல் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதியிடமும் தாம் தீக்குளிக்கப்போவதாக தெரிவித்ததைத் தொடர்ந்து அந்நபர் சிறைவைக்கப்பட்டார்.

மதுராந்தகத்தைச் சேர்ந்த திரு. நாகப்பன் என்பவரே இவ்வாறு சிறைசென்றுர்.

சென்ற மாதம் 16ந் திகதி பொலிசாரினல் கைதுசெய்யப்பட்ட இவர் 2ந் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டு நீதிபதிமுன் ஆஜர்செய்யப்பட்டபோது, கலைஞரையும் தலைவர்களையும் விடுதலை செய்யாமல் தான் விடுதலைபெறுவதில் அர்த்தமில்லை. தீக்குளிப்பதே எனது இறுதி முடிவாகும் என நீதிபதியிடம் தெரிவித்ததையடுத்து மீண்டும் சிறைவைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். [கே-இ]

## சஞ்சய் விமானம் ஓட்டத்தடை

புதுடில்லி, டிச. 7

திருமதி இந்திராகாந்தியின் புதல்வர் திரு. சஞ்சய் காந்தியினதும் அவரது மனைவி மேனகா காந்தியினதும் விமானம் ஓட்டும் லைசென்ஸ் அடுத்த வருடம் ஏப்ரல்மாதம் 30-ந் திகதிவரை தடுத்துவைக்கப்பட்டுள்ளது. இவ்வுத்தரவை விமானப் போக்குவரத்து டைரக்டர் ஜெனரல் பிறப்பித்துள்ளார். (கெ-இ)

## புதிய சுதந்திரநாடு

லண்டன், டிச. 7

7 தீவுகள் அடங்கிய பொப்புகட்ஸ் வானுவுக்கு தென் ஆபிரிக்கா சுதந்திரம் வழங்கியுள்ளது.

இச் சுதந்திரத்தை பிரிட்டன் அங்கீகரிக்க மாட்டாது என்று பிரிட்டிஷ் அரசு தெரிவித்துள்ளது. (இ)

## வாலிபர்களுக்கு மீன்பிடிப் பயிற்சியும் கடலில் படகுகளும்

[காரைநகர்]

காரைநகர் ஊரியைச் சேர்ந்த தொழில் வசதியற்ற வாலிபர்களுக்கு யாழ்.லயன்ஸ் கிளப் ஸ்தாபனத்தார் கடற்றொழிலை ஊக்குவிக்குமுகமாக, இலங்கை வங்கியின் உதவியுடன் 16 இளைஞர்களுக்கு 4 மீன் பிடிப் படகுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளனர்.

இத்திட்டத்தை பரீட்சார்த்தமான முறையில் முதன் முதலாக ஊரியிலும் அடுத்ததாக நாவாந்துறையிலும் அறிமுகப் படுத்தவிருக்கின்றனர்.

இத்திட்டத்தைச் செயல் முறைப்படுத்துவதற்கு யாழ். லயன்ஸ் கிளப் உறுப்பினர்களும் சீ. நோர். அபிவிருத்தித்திட்ட கணக்காளர் திரு. சதாசிவம் சீ. நோர். அபிவிருத்தித்திட்ட உற்பத்தி முகாமையாளர் திரு. தயாபரன் ஆகியோர் இதில் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

இதற்கான கடற்றொழில் பயிற்சிகள் யாவும் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த திரு. ஈ. கெமென்சனல்நடாத்தப்பட்டு வருகின்றது.

## அடையாளம் காணப்படாத சடலம்

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் கே. கே. எஸ். வீதியில் அனுதரவாகக் கிடந்த வயோதிப மாது ஒருவரின் சடலம் ஒன்று யாழ். ஆஸ்பத்திரி பிரேதச் சாலையில் அடையாயம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

60 வயது மதிக்கத்தக்க இப்பெண்ணின் கைவிரல்களில் 7 வெள்ளி மோதிரங்களும் வெள்ளித் தோடு காப்பு ஆகியனவும் உள்ளன. இவரின் தலைமயிர் குட்டையாக வெட்டப்பட்டுள்ளன.

கோப்பாய் பொலிசைச் சேர்ந்த எம். ஸ்டீபன் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டார்.

எவரும் இச்சடலத்திற்கு உரிமை கோராவிட்டால் வெள்ளியன்று அரச செலவில் அடக்கம் செய்யப்படும் என்று பொலிசார் தெரிவித்தார் [இ]

## தி.மு.க.வினருக்கு ஆளுநர் நன்றி

சென்னை, டிச. 7

தமிழ்நாடு புயல், வெள்ள நிவாரணப் பணிகளுக்கு ஆதரவு வழங்கிய தி. மு. க. வினருக்கு தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி நன்றி தெரிவித்துள்ளார். (இ)

## ரூ.67லட்சத்து32ஆயிரம் நிவாரண நிதி

சென்னை, டிச. 7

தமிழ்நாடு முதல் அமைச்சரின் புயல் வெள்ள நிவாரண நிதிக்குஇதுவரை 67 லட்சத்து, 32ஆயிரம் ரூபா கிடைத்துள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

தமிழ்நாட்டுக்கு மத்தியஅரசு உதவி

## 34 கோடிரூபா புயல் நிவாரண நிதி

புதுடில்லி, டிசம். 7

தமிழ்நாட்டில்புயல்,வெள்ள நிவாரண வேலைகளுக்கு மத்திய அரசு 33 கோடியே 91 லட்சம் ரூபா வழங்கும் என்று விவசாய அமைச்சர் திரு. பர்னலா நேற்று லோகசபையில் தெரிவித்தார்.

ஆந்திரப் பிரதேசவெள்ள நிவாரணப்பணிகளுக்கு 75 கோடியே 9 லட்சம் ரூபா வழங்கப்படும் என்றும் திரு. பர்னலா தெரிவித்தார்.

### 70 லட்சம் டாலர் வெளிநாட்டு உதவி

புயல், வெள்ளநிவாரண வேலைகளுக்கு வெளிநாடுகள் 70 லட்சம் டாலரை உதவியாக வழங்கியுள்ளன!என்றும் அவர் கூறினர். (இ)

## கள்ளக்குடியேற்றக்காரருக்கு பிரிட்டனில் மன்னிப்பு

லண்டன் டிச.7

பிரிட்டனில் சட்டவிரோதமாகக் குடியேறிய 1663 பேருக்கு மன்னிப்புச் சட்டத்தின்கீழ் பிரிட்டிஷ் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக நேற்று பிரிட்டிஷ் ஆட்சிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

மன்னிப்பு வழங்கப்பட்டவர்களில் அநேகர் இந்தியர்களும் பாகிஸ்தானியர்களுமே என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## 3நாடுகள் எண்ணை விலையை அதிகரிக்க மறுப்பு

றியாத், டிச. 7

சவூதி அரேபியா, ஈரான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் அடுத்த ஆண்டில் எண்ணையின் விலையை அதிகரிப்பதில்லை என முடிவு செய்துள்ளன.

இவ்விவகாரம் குறித்து சவூதி அரேபிய எண்ணை அமைச்சர் ஜனப் ஜமானி ஈரான், அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளுடன் தொடர்பு கொண்டதை அடுத்தே இந்நாடுகள் மேற்கண்டவாறு முடிவு செய்துள்ளன.

இம்மாத நடுப் பகுதியில் கராகஸில் நடைபெற உள்ள 'ஒப்பெக்' நிறுவன நாடுகளின் மகாநாட்டில் எண்ணையின் விலையை அடுத்த ஆண்டில் அதிகரிக்கக் கூடாது என்று இந்தநாடுகள் வற்புறுத்தும் என்றும் ஜனப் ஜமானி தெரிவித்தார். 'ஒப்பெக்' நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் 13 நாடுகளில் 9 நாடுகள் எண்ணை விலையை அடுத்த ஆண்டில் அதிகரிக்க வேண்டும் என்று ஏற்கனவே முடிவு செய்துள்ளமை தெரிந்ததே. (இ)

## கல்யாணசுந்தரம் எம்.ஜி.ஆர். சந்திப்பு

[சென்னை]

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் நாட்டுத் தலைவர் திரு. கல்யாணசுந்தரம், அண்ணு திராவிட முன்னேற்றக்கழக தலைவர் திரு.எம்.ஜி.இராமச்சந்திரனை சென்றவாரம் அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடினர்.

இரு கட்சிகளுக்குமிடையே இருந்துவரும் கருத்துவேறுபாடுகள் குறித்து இவர்களுக்கிடையில் சமரசமுடிவு ஒன்று மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [இ]

## "கூட்டுறவு ஊழியனுக்கு மனிதாபிமானம் வேண்டும்"

(புங்குடுதீவு)

"சமூக பொருளாதார முன்னேற்றங்களுக்குத் தொழிலாளிகளின் அனுசரணையும் ஆதரவும் அவசியமானது. அவர்களுடைய உரிமைகள் சரிவர வழங்கப்படும் பட்சத்திலேதான் அவர்களுடைய ஒத்துழைப்புக் கிடைக்க வழியுண்டு. "மேவிப்புவிமிசைக் காப்பவர் நீர்" என்று தொழிலாளர்களை வாழ்க்கையின் ஆதார அச்சாணியாகப் பாராட்டியுள்ளான் பாரதி. பிறர்பங்கை திருடுவதும் அத்திருட்டுக்கு உடந்தையாக இருப்பதும் துரோகமான செயலாகும்"

மேற்கண்டவாறு புங்குடுதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க-தொழிற்சங்கச் செயலாளர் புலவர் ஈழத்துச் சிவானந்தன் கூட்டுறவுத் தொழிலாளர் மத்தியில் உரையாற்றும் போது குறிப்பிட்டார். தொழிற்சங்கத் தலைவர் திரு .மு . பொன்னம்பலத்தின் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு சிவானந்தன் தொடர்ந்து கூறியதாவது:

"கூட்டுறவு ஊழியர்களே நாட்டுமக்களின் பிரதான காப்பாளர்களாவர். மக்களுக்குத் தேவையானதைப் பங்கிடு செய்து அவர்களை நுகரவைப்பதில் கூட்டுறவு ஊழியர்கள் மிகவும் கவனத்துடன் செயல் புரியவேண்டும். மனிதாபிமான கண்ணேட்டத்தோடு பொது மக்களுக்கிருக்கும் துன்பங்களில் பங்குகொண்டு அவர்கள் செய்யும் நன்முயற்சிகளுக்கு ஆதரவு அளிப்பதும் கூட்டுறவாளரின் கடமையாகும்.

திரு.கணேசபிள்ளை சு.தியாகலிங்கம், திரு.க.பரமேஸ்வரன் உட்பட மற்றும் பலரும் பேசினர். (அ)

## அனலைதீவில் கடற்றொழிலாளர் சங்கக் கிளை

[அனலைதீவு]

ஊர்காவற்றுறை கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தின் 20வது கிளை அனலைதீவில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. ஊர்காவற்றுறைக்கடற்றொழிற் பரிசோதகர் திரு. எஸ்.சிவநேசன், சங்கப் பொது முகாமையாளர் திரு.மு. கெங்கேஸ்வரன் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இக்கிளை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் இ. சின்னத்தம்பி, உபதலைவர்! ஜ்.செல்லையா செயலாளர்:ஐ.இராசேந்திரம். உறுப்பினர்கள்:மு. கந்தையா, சி.செல்லன், ஐ பரராஜசிங்கம், சி நாகராசா. (அ)

## கல்வி அதிகாரி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தின் பணிப்புக் கிணங்க புதிய பங்கீட்டுப் புத்தகங்களை வழங்குவதற்கான பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு சகல பாட

(5ம் பக்கம் பார்க்க)

# 'கொடுமைகளை தாங்கமுடியாமல்தான் தமிழ்ஈழ முடிவுக்கு வந்தோம்'

## பேரவையில் கிளிநொச்சி எம். பி.

"இதுவரை தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை நீங்கள் நீக்குங்கள் தமிழ்மக்களுக்குச் செய்யப்பட்ட அக்கிரமங்களை நீக்குங்கள். இந்தப் பிரச்னைகளை எல்லாம் தீர்க்கக்கூடிய நிலையில் நீங்கள் இருக்கின்றீர்கள். 140 அங்கத்தினர்கள் உங்கள் பக்கத்தில் இருக்கிறார்கள். இரட்டை அங்கத்தவர் தொகுதிகளில் வெற்றிபெற்றவர்களைக் கழித்தால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இரண்டே இரண்டு அங்கத்தவர்கள்தான் தனித்தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். எனவே அத்தகைய வெற்றிபெற்ற உங்களால் இந்தப் பிரச்னைகளையெல்லாம் தீர்க்கமுடியும்."

மேற்கண்டவாறு கிளிநொச்சி எம். பீ. திரு. ஆனந்தசங்கரி தேசிய அரசுப்பேரவையில் பட்ஜட் விவாதத்தின் போது பேசுகையில் கூறினார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

சபாநாயகரவர்களே, கடந்த அரசாங்கத்தின் காலத்திலே செய்யப்பட்ட அநியாயங்களை எடுத்துக் கூறுவதானால் பல நாட்கள் தொடர்ச்சியாகக் கூறிக்கொண்டே போகலாம். தமிழாராய்ச்சிமகாநாடு யாழ்ப்பாணத்திலே நடந்தபொழுது பத்துப் பேர்களுடைய உயிர் பறிபோனதற்குக் காரணம் பொலிஸ்காரர்களுடைய நடத்தைதான் என்பது நாடுமுழுவதும் அறிந்தவிஷயம். பத்துப் பேர்களுடைய மரணத்துக்குக் காரணமாகஇருந்த பொலிசார் மீது நடவடிக்கை எடுங்கள் என்று நாங்கள் அன்றிருந்த பிரதம அமைச்சரைக் கேட்டோம். ஆனால், அன்றைய பிரதமர் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. பதிலாக அதற்குப் பொறுப்பாக இருந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்த்தப்பட்டார். பத்துப் பேர்களுடைய உயிர் பறிபோகக் காரணமாக இருந்தவருக்குப் பதவி உயர்வு! ஆனால் சிறையிலே மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த மறுசிறு என்பவர் எவ்வாறு இறந்தார் என்பதை அறிய ஒரு விசாரணை ஆணைக்குழு. கடந்த அரசாங்கம்தான் அந்த ஆணைக்குழுவை நியமித்தது. இவ்வாறுதான் கடந்த அரசாங்கத்திலே நாங்கள்நடத்தப்பட்டோம். இதை இங்கே இருக்கிற புதிய அங்கத்தினர் நன்கு அவதானிக்க வேண்டும்.

### இந்த அரசிலே...

இந்த அரசாங்கத்திலே நடந்த ஒரு சம்பவம்; அதையும் சன்சோனி கமிஷன் விசாரிக்கும் என்று நம்புகிறேன். வவனிக்குளம் கிளிநொச்சி எல்லையிலே உள்ள பிரதேசம். ஐந்து இளைஞர்களை இராணுவத்தினர் நாயைச் சுடுவது போலச் சுட்டார்கள். மூன்று மாதங்களுக்கு முன்நடந்த சம்பவம் இது. இவ்விதம் சுட்டவர்கள் மீது எவ்விதமான நடவடிக்கையும்எடுக்கப்படவில்லை இறந்தவர்களுடைய சடலங்களிலே ஈ மொய்த்து புழுநெளியும்வரை உறவினர்கள் பிரேதங்களின் கிட்டக்கூடப் போக முடியாதநிலை இருந்தது. இவ்வாறு ஒன்றல்ல, பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

சபாநாயகரவர்களே, மூளைகள் நாட்டைவிட்டுவெளியேறுகின்றன என்று அரசாங்கம் கவலைப்படுகின்றது. இந்த மூளைசாலிகள் எதற்காக இந்த நாட்டைவிட்டுவெளியேறுகின்றார்கள் என்று அரசாங்கம் சிந்திக்கவில்லை. இதைப் புதிய அங்கத்தினர்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மிகவும் துர்ப்பாக்கியநிலையில் அரசாங்க ஊழியராக இருந்தாலும்சரி தனியார்துறை ஊழியராக இருந்தாலும்சரி மூளைசாலிகள் என்று வர்ணிக்கப்படுபவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் பலவிதமாகப் பாதிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு உரிய இடம் கொடுக்கப்படவில்லை. அவர்கள் தங்கள் திறமையைக்காட்டச் சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. அவர்கள் பணம் சம்பாதிக்கமட்டுந்தான் வெளிநாடு சென்றவர்கள் அல்லர். அவர்கள் தங்களுடைய சுயகௌரவத்தைக் காப்பாற்றவே வெளிநாடு சென்றார்கள் எனக் கூறுவதே மிகப் பொருத்தமானது. அவர்கள் விரக்தி அடைந்துதான் இந்த நாட்டைவிட்டு வெளியேறினார்கள்.

### கடந்த அரசின் தவறை நீக்குங்கள்

சபாநாயகர் அவர்களே, இங்கு கௌரவ நிதி அமைச்சர் அவர்கள் பேசும் போது சொன்னார், தமது அமைச்சில் இரண்டு பெரிய பதவிகளைத் தமிழர்கள் வகிக்கிறார்கள் என்று. அவர்கள் திறமைசாலிகள் என்பதாலேயே அவர்களுக்கு அந்தப் பதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் தமக்குப் பிரயோசனப் படுவார்கள் என்பதாலேயே அவர்களுக்கு அந்தப் பதவிகளை நிதி அமைச்சர் வழங்கி இருக்கிறாரே ஒழிய எங்களுக்கு சலுகை செய்வதற்காக அல்ல. தமிழ் இனத்துக்குச் சலுகையாக அவர்களை நிதிஅமைச்சர் வைத்திருக்கவில்லை. தமிழ்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவும் அவர்களை வைத்திருக்கவில்லை. அவர்கள் திறமைசாலிகளாக இருந்தார்கள். அவர்களது திறமையை அமைச்சர் பாவிக்கின்றார். இதேபோல திறமையுள்ள பல அரசாங்க ஊழியர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லோரையும் நீங்கள் பாவிக்கவில்லை. இதுபற்றி ஆதாரங்களுடன் கூறமுடியும். கடந்த அரசாங்கம் தவறு செய்திருந்தால் அந்த அரசாங்கம் செய்த தவறை நீங்கள் நிவர்த்தி செய்யுங்கள்;

இன்று எத்தனையோ அரசாங்க உழியர்கள் தரத்தால் கூடியவர்களாக இருந்தும் தங்களுக்குக்கீழ் இருக்கவேண்டியவர்களுக்குக் கீழ் வேலைசெய்கிறார்கள். அரசாங்க அதிபராகக் கடமையாற்ற வேண்டியவர்கள் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றுகிறார்கள். உதவி அரசாங்க அதிபராக இருக்கவேண்டியவர்கள் அரசாங்க அதிபராக இருக்கிறார்கள். இப்படியான துர்ப்பாக்கிய சம்பவங்களை நாளுக்கு நாள் நாம் கண்டு கொண்டு வருகின்றோம்.

### தரப்படுத்தல் நீக்கப்பட்டதா?

எமது பிள்ளைகளுக்குத் தரப்படுத்தல் முறைமூலம் கொடுமைகளை விளைவித்தார்கள். தரப்படுத்தல் மூலம் விளைவிக்கப்பட்ட கொடுமைகளை நீக்கிவிட்டது இந்த அரசாங்கம். பிரதமர் அவர்கள் என்னைப் பார்த்துப் புன்னகை பூக்கின்றார்.

தரப்படுத்தல் முறைநீங்கிவிட்டது என்று சொல்லுகிறார் போலும். அது உண்மையாக நீக்கப்பட்டுவிட்டதா இல்லையா என்பதைச் சர்வகலாசாலைத் தேர்வுகள் முடிந்த பிறகுதான் எங்களால் உறுதியாகக் கூறமுடியும். தரப்படுத்தல் முறையை நீக்கியது குறித்து நாங்கள் பிரதமருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

### பிரச்னைகளைத் தீர்க்க உங்களால் முடியும்

நீங்கள் எங்களைக் குறைகூற முன்னர் உங்களைத் திருத்திக் கொள்ளவேண்டும்; இதுவரை எங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை நீக்குங்கள். தமிழ் மக்களுக்குச் செய்யப்பட்ட அக்கிரமங்களை நீக்குங்கள். இந்தப் பிரச்னைகளை எல்லாம் தீர்க்கக்கூடிய நிலையில் நீங்கள் இருக்கின்றீர்கள் 140 அங்கத்தினர்கள் உங்கள் பக்கத்தில் இருக்கிறார்கள். இரட்டை அங்கத்தவர் தொகுதிகளில் வெற்றி பெற்றவர்களைக் கழித்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இரண்டே இரண்டு அங்கத்தவர்கள்தான் தனித் தொகுதிகளில் வெற்றிபெற்றிருக்கிறார்கள். எனவே அத்தகைய வெற்றி பெற்ற உங்களால் இந்தப் பிரச்னைகளை எல்லாம் தீர்க்க முடியும். அப்படி இந்தப் பிரச்னைகளை உங்களால் தீர்க்க முடியாது என்று கூறினால் அது பிரச்னைகளைத் தட்டிக்கழிக்கச் சொல்லும் கூற்றாகவே இருக்க முடியும்.

நாங்கள் தமிழ் ஈழக் கோரிக்கையை வைத்துத் தேர்தலில் போட்டி போட்டு வந்தவர்கள். எங்களை உங்களால் செல்லாக்காசாக்க முடியும். நாங்கள் சந்தோஷமாக இந்தப் பிரிவினையைக் கேட்கவில்லை. சண்டை பிடித்து தமிழ் ஈழம் தாருங்கள் என்று கேட்பதில் எங்களுக்கு மகிழ்ச்சி இல்லை. எங்களுக்கு அதில் பெருமை இல்லை. நாங்கள் பாராளுமன்றப் பதவியில் நீடித்திருக்க வேண்டுமென்பதற்காக அப்படிக் கோருவதாக நீங்கள் கூறினால் அது தவறாகும். உங்களால் முடியுமாக இருந்தால் இந்த நாட்டில் சுபீட்ச நிலையை உண்டுபண்ணுங்கள். தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்குங்கள், நீதி வழங்குங்கள், பிரிந்து சென்றால் இதிலும் மோசமான நிலைக்கு வந்துவிடுவோம் என்று தமிழ் மக்கள் மனதில் படியவைத்து தமிழ் மக்களிடம் எங்களைச் செல்வாக்கு இழக்கச் செய்யுங்கள், காலம் கடத்தாமல் இதைச் செய்யுங்கள் என்று நான் கேட்கிறேன். ஆகவே தமிழ் ஈழம் கோருபவர்கள்மீது குறைகூறுவதை விடுத்து தமிழ் ஈழம்கோரக் காரணமாக இருந்தது எது என்பதைக் கண்டுபிடித்து அதற்குப் பரிகாரம் தேடுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் எத்தனையோ பிரச்னைகள். அதை இங்கே கூறவேண்டியது அவசியமில்லை, என்றாலும் கிளிநொச்சித் தொகுதியில் அநேகர் தேவையான ஆதாரம் காட்டியும் கூப்பன் எடுக்க முடியாமல் இருக்கிறார்கள் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

### தோட்டத்திலே வாழ்ந்தவர்கள் நிலை

எஸ்டேட்டிலே இருக்கின்ற தொழிலாளர்கள் எஸ்டேட்டை விட்டு வெளியேறும் நேரத்திலே ரேஷன் கார்ட் என்று ஒன்றைக் கொண்டுவருகிறார்கள். அது கடைசி நாள் வரையும் தோட்டத்திலே அவர்களுக்கு அரிசியும் சீனியும் வழங்கப்பட்டது என்பதற்கு ஆதாரம்; ஆனால் அதைக் கொண்டுவந்து யாழ்ப்பாணத்திலே அல்லது வவனியாவிலே குடியேறிவிட்டால் அவர்கள் காட்டுகிற ஆதாரத்தை ஏற்க அரசாங்க உத்தியோகத்தர்கள் தயாராக இல்லை. "1949ம் ஆண்டில் எங்கே இருந்தாய் அதற்குஆதாரம்கொண்டுவா" என்கிறார்கள். இதில் எந்தவிதமான நியாயமும் இல்லை. மனச்சாட்சிக்கு உட்பட்டதல்ல இப்பேர்ப்பட்ட அக்கிரமம்.

அண்மையிலே ஏற்பட்ட வகுப்புக்கலவரம் காரணமாகக் குடிபெயர்ந்த சில குடும்பத்தினர் கிளிநொச்சிக்கு வந்து என்னிடம் முறையிடுகிறார்கள். ஒரு குடும்பத் தலைவர் எனக்குச் சொன்னார் "நான் அனுராதபுரத்துக்குத் திரும்பிச் சென்று பார்த்தேன். அங்கே வாழமுடியாத நிலை. அங்கே தொடர்ந்து வாழமுடியாது. கூப்பனை மாற்றித் தரும்படி கிராம சேவகரைக் கேட்டால் முடியாது என அவர் மறுத்துவிட்டார்; உதவி அரசாங்க அதிபரிடம் கேட்டால் அவரும் முடியாது என்று சொல்லிவிட்டார் என்று. அவர் இன்று கிளிநொச்சியிலே கூப்பன் எதுவும் இல்லாமல் பிச்சை எடுக்கும் நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார். இப்படி எத்தனையோ சம்பவங்கள். அவற்றைச் சபையிலே கூறப்போனால் நாட்கணக்கிலே கூறிக்கொண்டே போகலாம். மனச்சாட்சிசொல்லவேண்டும். மனச்சாட்சி உங்களுக்கு உறுத்தவேண்டும். மனச்சாட்சிக்கு நீங்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

### நிபுணர்களின் கண்டுபிடிப்பு

அரசாங்க ஊழியர்களுடைய நிலையை எடுத்துப் பாருங்கள். எனக்குத் தெரியும் ஒரு வயோதிப மாது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு அரசாங்க சேவையிலே அற்றண்டன் ஆகச்சேர்ந்தவர்; அந்தக்காலத்திலே அப்பதவியில் சேர்வதற்கு ஐந்தாம் வகுப்புக்கூட தேவையில்லை; 30 ஆண்டுகள் இந்த நாட்டுக்குச் சேவை செய்த பின் தமக்கு இறுதிக் காலத்தில் பென்சன் வரும் என்ற நம்பிக்கையோடு அந்த வயோதிய மாது இளைப்பாறினார். அவர் இளைப்பாறியபிறகுதான் யாரோ நிபுணர்கள் கண்டுபிடித்தார்களாம், அந்த வயோதிப் மாது சிங்களச் சோதனை பாஸ்பண்ணவில்லை என்று. அதனால் அந்த வயோதிப மாதுக்கு பென்சன் இல்லை. இன்று அவர் பிச்சை எடுக்கிற நிலையிலே வீதியிலே அலைய வேண்டிய நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார். இந்தநிலை இவருக்கு ஏற்படக் காரணம் என்ன? இவர் ஒரு தமிழர் என்பது தான் அதற்குக் காரணம். உங்களுடைய மனச்சாட்சியைத் தட்டிச் சொல்லுங்கள் ஆங்கிலேயர் காலத்திலே அந்த வயோதிப மாதிற்கு இருந்த சலுகை அந்தத் தமிழ் அற்றன்டனுக்கு இருந்த சலுகை உங்களுடைய ஆட்சியில் இருக்கிறதா?

### போட்டர்கள் முறையீடு

நான் இரண்டு நாட்களுக்கு முன் இங்கு வருவதற்காகப் புகையிரத நிலையத்துக்குச் சென்றேன். அங்கே போட்டர்கள் வந்து எனக்கு முறையிடுகிறார்கள், தங்களுக்குச் சிங்களத் தேர்ச்சி இல்லாத காரணத்தினால் பதவி உயர்வு இல்லை. வேலை நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று. 15 ஆண்டு காலமாக போட்டராக வேலை செய்த ஒருவர் இன்று ரயிலிலே அரிசி விற்றுக்கொண்டு திரிகிறார். இன்று அரசாங்கம் 10 வருடங்கள் சேவை செய்தால் போதும்; இளைப்பாறிச் சம்பளம் பெறலாம் என்கிறது. யாருக்கு இந்தச் சலுகை? சிங்களவர்களுக்கா? தமிழர்களுக்கா? அல்லது இந்த நாட்டு மக்களுக்கா? இவற்றுக்கெல்லாம் பரிகாரம் தேடிவிட்டுக் கூறுங்கள். தமிழ் நாடு கேட்க உங்களுக்கு உரிமை இல்லை; நாங்கள் எல்லாப் பிரச்சினைகளையும்தீர்த்துவிட்டோம்இனி நீங்கள் தனி நாட்டைப் பற்றிப் பேசக்கூடாது என்று நாங்கள் அதைப்பற்றிச் சிந்திக்கிறோம். எங்களுக்குச் செய்யப்பட்ட அநீதிகள், எங்களுக்குச் செய்யப்பட்ட கொடுமைகள் எமது இனத்துக்குச் செய்யப்பட்டு வருகிற இன்னல்கள் முதலியவற்றைத் தாங்க முடியாமல்தான் நாங்கள் இந்த முடிவுக்கு வந்தோம். அந்த இன்னல்கள் உங்களால் தீர்க்க முடியுமாக இருந்தால் நாங்கள் எங்களுடைய தமிழ் ஈழக் கோரிக்கையை மறுபரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறோம். எங்களுடைய பிரச்னைகளைத் தீர்த்து வையுங்கள்.

[இன்னும் வரும்]

---

## பாடசாலைக்கு வெளியே வகுப்புகள்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி சைவவித்தியாசாலை மாணவர்களின் சில வகுப்புக்கள் திருநெல்வேலி இந்து வாலிப சங்க மண்டபத்தில் நடைபெற்று வருகின்றன. இப்பாடசாலையில் இடநெருக்கடி காரணமாக மாடிக்கட்டிடம் கட்டப்படுவதால் தற்காலிகமாக மேலும் சில மாதங்களுக்கு இ. வா. சங்க மண்டபத்தில் இவர்கள் படிக்க வேண்டியுள்ளது. கிராமத்தின் முன்னேற்றம் கருதியும், மாணவர்களின் கல்வி வசதி கருதியும் சங்க மண்டபத்தை தற்காலிகமாக பாடசாலைக்குக் கொடுத்துதவி பத்திரிகை வாசகர்களுக்கு மாலை நேரத்தில் மாத்திரம் பாவிப்பதற்கு சங்க நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது. [அ]

## 'பொறியியல் இளைஞன்'

(திருநெல்வேலி)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரிப் பொறியியல் மாணவ மன்றத்தின் வருடாந்த நிறைவையொட்டிப் பொறியியல்

(5ம் பக்கம் பார்க்க)

சுசி

கலண்டர்கள்
டயறிகள்
பிளாஸ்டிக் டயறிகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்.
வடபகுதி விநியோகஸ்தர்கள்:

எஸ். பி. சாமி அன் கொம்பனி,

193, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி - சரோஜாதேவி
குலமகள் ராதை

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-30 p. m.
SEVEN SAMUARI

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ். நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். சரோஜாதேவி நடித்த
தாயைக் காத்த தனயன்
(புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
10-30, 2-30, 6-30, 9-45
திலிப்குமார், நிம்மி, சூரியகுமாரி நடித்த
வானரதம் (தமிழ்)
இசை: "அக்பர்" புகழ் நௌஷாத்.

ராணி தினசரி 10-30, 2-30, 6-00, 9.30.
சுஜாதா- விஜயகுமார் நடித்த
[யாழ்ப்பாணம்]
அவள் ஒரு தொடர்கதை
[புதிய பிரதி]

Regal (Jaffna)
"KRAKATOA" IS A STUNNER!
A Grand Adventure spectacle designed to knock you out.
It is Sensational. An artistic and technical triumph.
Adults may find themselves biting their nails.
Now running to packed houses in its
2nd Week 70 M. M.
"Krakatoa East of Java"
Cinerama wide screen! [Techni color]
Daily at 4-15 7-00 & 9-30 P. M. only
Sat, Sundays 10-30, A.M. 1-30 4-15 7-00 & 9-30P.m.

10-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
ஜெமினி, ஜெயசித்திரா நடித்த
தசாவதாரம்
பாடசாலை மாணவர்கள் ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளவும்.

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, ஜெமினி - லக்ஷ்மி - நிர்மலா
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடியது
★ கமலஹாசன் ரஜனிகாந்த்
★ எம். எஸ். விஸ்வநாத்
★ ஸ்ரீதேவி ★ ஒய். விஜயா
R. M. S. புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
மூன்று முடிச்சு
திரைக்கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

# சின்னஞ்சிறு சகோதரிகள் கிணற்றுக்கு அநியாயப்பலி!

## குப்பிளானில் நெஞ்சுருக்கும் சம்பவம்

(மாவிட்டபுரம்)

ஆறு மாதமே நிரம்பிய பிச்சிளம் பாலகியும், 10 வயது சிறுமியும் ஒன்றாகக் கிணறொன்றில் வீழ்ந்து மரணமான மனதை நெகிழவைக்கும் சம்பவம் குப்பிளானில் இடம் பெற்றுள்ளது.

குப்பிளானைச் சேர்ந்த முருகன் செல்லையா என்பவரது நந்தினிதேவி (10 வயது), கவிதா (6 மாதம்) ஆகிய பிள்ளைகளே இவ்வாறு மரணமானவர்களாவார்கள்.

இம்மரணங்கள் குறித்துத் திடீர் மரண விசாரணை அதிகாரியும் சட்டத்தரணியுமான திரு. க. பரமநாதன் விசாரணை நடத்திய சமயம் காலமான பிள்ளைகளது தந்தை முருகன் செல்லையா, தாய் இலட்சுமி, மாமன் த. இராசன், விவசாயியான வே. தம்பிஐயா ஆகியோர் சாட்சியமளித்தனர்.

காலமான பிள்ளைகளது தாயின் சகோதரிக்கு அடுத்த வாரம் திருமணம் நிகழ இருந்ததால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக பெற்றோர்கள் அவர்களது வீட்டுக்குச் சென்றுவிடவே பாடசாலைக்குப் போய்விட்டு வீட்டுக்கு வந்த நந்தினிதேவி தனது தங்கையையும் இடுப்பில் சுமந்த வண்ணம் பெற்றோரைத் தேடிச் சென்றபோது இடைவழியிலிருந்த தோட்டக்கிணற்றினுள் இருவரும் தவறி வீழ்ந்ததாகவும், பின்னர் விவசாயி ஒருவரது தகவலின் பேரில் கிணற்றிலிருந்து அவர்களை மீட்டபோது அவர்கள் மரணமாகியிருந்ததாகவும் சாட்சியங்கள் தெரிவித்தன.

விபத்து மரணங்கள் எனத் தீர்ப்பளித்த மரண விசாரணை அதிகாரி, "பிள்ளைகளைப்பெற்றால் மட்டும் போதாது, அவர்களைப் பேணிவளர்க்க வேண்டும் பெற்றோர் பிள்ளைகளைக் கவனியாது விட்டதால் அநியாயமாக இரு உயிர்கள் பலியாகியுள்ளன" என்று தெரிவித்தார். (அ)

### எம். பிக்கு மகஜர்

[அரியாலை]

நாயன்மார் குளத்தை ஆழமாகத் தோண்டி மாரிகாலத்தில் அதிக நீரைச் சேகரிக்க நடவடிக்கை எடுக்கும்படியும் குளத்தையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும், விவசாய விஸ்தரிப்புக்குக் கீழ் கொண்டு வரும்படியும் கோரி நல்லூர் தொகுதி தேசிய அரசு பேரவை உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரத்திற்கு அரியாலை காந்தி சன சமூக நிலையம் மகஜரொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் 'குளத்தின் அணைச்சுவரை உயர்த்திக்கட்ட வேண்டுமென்றும், அடுத்த கோடை காலத்தில் குளத்தை ஆழமாகத் தோண்ட வேண்டுமென்றும், குளத்திற்கு மாரி காலத்தில் நீரை நிரப்பும் பிரதான வாய்க்கால்களுக்கு அணைசுவர் கட்டிப் பாதுகாக்கும்படியும், இதற்கான நிதியை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்க வேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது. [உ]

### பாண்பற்றிப் புகார்

[சங்கானை]

வலிகாமம் மேற்குப்பிரிவில் விற்பனையாகும் பாண் தரத்திலும் நிறையிலும் குறைந்தனவாகவும் வண்டுகள் நிறைந்திருப்பதாகவும் என புகார் தெரிவிக்கப்படுகிறது. (அ)

### கி. அ. சபைக்கு புதிய கட்டிடம்

(சங்கானை)

சங்கரத்தை கிராம அபிவிருத்திச் சபை இருபதினாயிரம் ரூபா செலவில் புதிய கட்டிடம் ஒன்றை நிறுவியுள்ளது. இதற்கான ஓடுகளை மில்க் வயிற் ஸ்தாபனத்தினர் அன்பளிப்புச் செய்துள்ளனராம். (அ)

### பஸ் சேவை சீர்கேடு

[பூநகரி]

சில நாட்களாக மன்னார், கிளிநொச்சி பஸ்சேவை நேர அட்டவணைப்படி சேவையில் ஈடுபடாமையினால் பிரயாணிகள் கால் கடுக்க நெடுநேரம் காத்து நின்று புலம்புகின்றனர். [அ]

### ஏழைகள் துன்பம்

[பூநகரி]

பூநகரி சந்தையில் மரக்கறி வகைகளோ, தேங்காயோ, மீன்வகைகளோ வாங்க முடியாதபடி விலைவாசிகள் ஏற்றம். இதனால் ஏழைமக்கள் தங்களது நாளாந்த சீவியத்தைச் சமாளிக்க முடியாதபடி மிகவும் துன்பப்படுகின்றனர். [அ]

### தபால் பெட்டி இல்லை

[சங்கானை]

வலிகாமம் மேற்குப் பிரிவில் சித்தன்கேணி, சங்கானை, மானிப்பாய் ஊடாகச் சேவையில் ஈடுபட்டுள்ள தபால் பஸ்ஸிலிருந்த தபால் பெட்டி உடைந்ததால் கடந்த சில நாட்களாக இதனால் தாமதத் தபால் சேர்ப்பதில் கஷ்டமேற்பட்டுள்ளது. [அ]

### பெ. ஆ. சங்கம்

[சங்கானை]

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய பெற்றோர் - ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டம் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. என் ஏ நாகராசா தலைமையில் நடைபெற்றபோது நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: என். ஏ. நாகராசா, செயலாளர்: சி. க. பேரம்பலம், பொருளாளர்: மு. சுப்பிரமணியம், உபதலைவர்: ந. சிவசிதம்பரம், உபசெயலாளர்: இ கந்தசாமி. நிர்வாக உறுப்பினர்கள் 14 பேர். (அ)

### பிரயாணிகள் கஷ்டம்

(பூநகரி)

பூநகரி சந்தைக்குள் அமைந்திருக்கும் பஸ் பிரயாணிகள் தங்குமிடம் எதற்கும் பயன்படக்கூடிய நிலையில் இல்லை மழைகாலங்களிலோ, வெய்யில் காலங்களிலோ தங்குமிடத்தில் பிரயாணிகள் இருக்காது கடைகளுக்கு முன் ஒதுங்கிநின்று பஸ் ஏறவேண்டியுள்ளது. பிரயாணிகள் இதுதவிர, பூநகரி வழியாக மன்னார் மற்றும் இடங்களுக்குச் செல்லும் பிரயாணிகள் பூநகரிச் சந்தைக்குள் அமைந்திருக்கும் பஸ் நிலையத்தில் சில மணி நேரம் பஸ் தங்கி நிற்கும்போது இயற்கை உபாதைகளைக் கழிக்கும் வசதியின்றி மிகவும் அவஸ்தைப்படுகின்றனர். எனவே பிரயாணிகளுக்கு வசதியான முறையில் மலசலகூடம் அமைக்கப்படுமா எனப் பிரயாணிகள் எதிர்பார்க்கின்றனர். (அ)

### தரகர் தொல்லை நீங்கும்

[பூநகரி]

பூநகரிச் சந்தைக்குள் இவ்வளவு காலமாகப்பொதுமக்கள் மரக்கறி வகைகளோ மற்றைய பொருட்களோ வாங்க முடியாதபடி தரகர் தொல்லை அதிகரித்துள்ளது. இதனை அவதானித்த கிராமாட்சி மன்ற நிர்வாகஸ்தர் 1978 ஆம் ஆண்டுக்கான சந்தைக் குத்தகை விளம்பரத்தில் இத்தொல்லையை முற்றாக நீக்க ஏற்ற நிபந்தனையை அடக்கியுள்ளமையை மக்கள் பாராட்டுகின்றனர். [அ]

### தெல்லிப்பழையின் முன்மாதிரி

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் அதன் கிளை நிலையங்களில் நிறை குறைவாக இருப்பதாகச் செய்யப்பட்டுவரும் புகார்களையடுத்து பொதுமக்களும் அப்பொருட்களை ஒரு முறை நிறுத்துச் சரிபார்ப்பதற்காக பரிட்சார்த்தமாக மேலதிக தராசுகளை கிளை நிலையங்களில் வைப்பதெனவும் சங்கம் தீர்மானித்துள்ளது. (அ)

---

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் கணேச சனசமூக நிலையம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: நி குணநீசன், உபதலைவர்: சி. மகாலிங்கம், செயலாளர், அ சிவனேசன், உபசெயலாளர்: சி. அனந்தபாலன் பொருளாளர்: க. சிவகுமார், கணக்குப்பரிசோதகர்கள்: க. இராமநாதன், கு. சின்னத்தம்பி செயற்குழு உறுப்பினர்கள் 11பேர் [அ]

---

### கல்வி —

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

சாலைகளையும் நாளை 8ம் தவணை விடுமுறைக்கு மூடி விடுமாறு வடமாநில கல்வி அதிபதி திரு. மாணிக்கவாசகர் சகல பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளார்.

புதியபங்கீட்டு புத்தகங்கள் வழங்கும் வேலைகளில் அதிகளவு ஆசிரியர்கள் ஈடுபட வேண்டி இருப்பதாலும் போதியளவு இடவசதி தேவையாக இருப்பதாலும் பாடசாலையை 8ம் திகதி மூடிவிடுமாறு அரசுகல்வி அதிபதிகளைக் கேட்டுள்ளது. (இ)

...

### பொறியியல்......

[4ம் பக்கத் தொடர்ச்சி]

மாணவமன்றம் அதன் இரண்டாவது படைப்பாக 'பொறியியல் இளைஞன்' என்னும் மலரை வெளியிட்டுள்ளது. இவ்வெளியீட்டு விழா திரு இ. ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக அதிபர் திரு சிடா ஜெயசிங்கம் கலந்துகொண்டு மலரை வெளியிட்டுவைத்தார். திரு. என். கே. நேரு, எஸ். இராஜேந்திரா, உப அதிபர் திரு. தி. ரவீந்திரன், திரு க. ரமணஸ்காந்தா, செல்வி ஐ. ஜெயசோதிமணர் ஆகியோர் உரையாற்றினர். (அ)

றியோ [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
விஷ்ணுவார்தன் சந்திரகலா
அலைகள்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி பி.ப. 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
ஜெய்சங்கர்-லட்சுமி
கண்ணன் வருவான்

### மணிவாக்கு

ஆருயிர்த் தோழனுயிருந்தாலும், உன்னுடைய இயலாமையையோ, வறுமையையோ பற்றிப் பேசாதே! எவர் முன்னும் உன் தன்மதிப்பினை விட்டு விடாதே! தாழ்வு மனப்பான்மையை நீக்கிவிடு!

...ஔவையார்.

ஈழநாடு
The Eelanaadu

## நம்பிக்கை

"இந் நாட்டில் வாழுகின்ற சகல இன மக்களும் சமஉரிமையுடனும், சமஅந்தஸ்துடனும் ஒருவரை ஒருவர் புரிந்து வாழ்வதற்கான நடவடிக்கைகளை நான் எடுப்பேன் என்று பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தன தேசியஅரசுப்பேரவையில் திட்டவட்டமாக அறிவித்திருப்பது நாட்டின் முன்னேற்றத்தையும், ஐக்கியத்தையும் மக்கள் அனைவருக்கும் ஆறுதலும் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையையுமளிப்பதாகும்.

1944ம் ஆண்டில் சிங்களமும் தமிழும் இந்நாட்டின் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்ட காலத்தில் இருந்து மொழிப் பிரச்னையின் வரலாற்றையும் உணர்வோடு பிரதமர் எடுத்துக் கூறியிருப்பது சமத்துவ சமுதாயத்தை உருவாக்குதற்குப் பிரதமர் உறுதி பூண்டிருக்கின்றார் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதாக இருக்கின்றது

தமிழ் மக்களுக்கு அரசமைப்புச் சட்டரீதியாக உரிமைகள் வழங்குவதற்குப் பிரதமர் தீர்மானித்திருக்கிறார்.

வரவு-செலவுத் திட்டம் தேசியஅரசுப் பேரவையில் குழுநிலையில் பரிசிலனை செய்யப்பட்ட சமயம் பிரதமர், ஜனாதிபதி ஆகியோரின் மான்யம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டுபேசுகையிலேயே பிரதமர் தமிழ்மக்களின் உரிமைகள் சம்பந்தமாக இந்த அறிவித்தலை வெளியிட்டார்.

அரசமைப்புச் சட்டத்தை திருத்தும் தெரிவுக்குழுவில் கலந்துகொள்ள தமிழர் விடுதலைக்கூட்டணியினர் விரும்பவில்லையாயினும் தமிழ் மக்களுக்கு இப்போதுள்ள பிரச்னைகளைத் தீர்த்துவைக்கக்கூடியமுறையில் அரசமைப்பைத் திருத்தி அவர்களின் உரிமைகளுக்கு வகைசெய்வோம் என்று பிரதமர் அறிவித்திருக்கிறார்.

திரு. ஜயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிபீடத்துக்கு வந்ததும் ஒன்றன்பின் ஒன்றாகப் பல பிரச்னைகள் தலைதூக்கின.

இந்தச் சமயத்தில் பல வாக்குறுதிகளைப் பிரதமரும் மற்றைய அமைச்சர்களும் அளித்தபோதிலும் அவற்றைச் செயல்படுத்துவதில் ஏற்பட்ட காலதாமதம் தமிழ்மக்கள் மத்தியில் சிறிது அவநம்பிக்கையைத் தோற்றுவித்தது.

ஆனாலும் தமிழ் இளைஞர்களைப் பெரிதும் பாதித்த தரப்படுத்தல் நீக்கப்பட்டது-

ஆகஸ்ட் இனக்கலவரம் பற்றி விசாரணைசெய்வதற்கு சன்சோனிக் கமிஷன் நியமிக்கப்பட்டிருப்பது-

இந்தக்கமிஷன் அறிக்கை வரும் வரை பொலிசார் காத்திருக்க வேண்டியதில்லை குற்றம்புரிந்தவர்கள் என ஆதாரபூர்வமாகக் கருதப் படுவோர் மீது இப்போதே வழக்குத்தொடரலாமெனப் பிரதமர் அறிவித்திருப்பது-

யாழ்ப்பாணம் தமிழாராய்ச்சி மாநாட்டுத் துயரச் சம்பவம்; புத்தளம் பள்ளிவாசல் சம்பவம் ஆகியவை பற்றி விசாரணைசெய்ய முன்னாள் நீதியரசர் திரு. ஏ. வி. எஸ். அலஸ் தலைமையில் விசாரணைக்கமிஷன் நியமிக்கத் தீர்மானித்திருப்பது-

சிங்களம் தெரியாத காரணத்தால் தமிழ்மக்களும் அரசாங்க ஊழியர்களும் பாதிக்கப்படமாட்டார்கள் என்று பிரதமர் அறிவித்திருப்பது-

இத்தனையும் தமிழ்மக்களுக்குப் பிரதமர் மீதும் அரசின்மீதும் நம்பிக்கை ஏற்படுத்த உதவுமென்பது உண்மையே.

பேரவையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இப் பிரச்னைகளைப் பற்றி எடுத்துக்கூறியதுடன் பிரதமருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளும் இவற்றுக்குக் காரணம்என்று சொல்லலாம்.

அகதிகள் பிரச்னை பற்றியும் பாரபட்சம் காட்டப்படமாட்டாதென்றும் அவ்விதம் காட்டப்பட்டிருந்தால் தமது கவனத்துக்குக் கொண்டு வரும்படியும் உள்ளூராட்சி அமைச்சர் கேட்டிருக்கிறார்.

பிரதமர், மற்றும் சில அமைச்சர்கள் பேசுவதையும் செய்வதையும் கேட்கும்போதும் பார்க்கும் போதும் அவர்களது அந்தரங்கசுத்தியில்ஐயம்கொள்ள இடமில்லை.

ஆனால் இவற்றை நடைமுறைப்படுத்த வேண்டிய அதிகாரவர்க்கம் இன்னும் பழைய பாதையை விட்டு விலகவில்லையே!

சீர்கெட்டுப்போயிருந்த பொலிஸ்சேவையைப் பெருமளவில் சீராக்கிவிட்ட பிரதமர் அதிகாரவர்க்கம் சம்பந்தமாகவும் விரைவில் கவனம் செலுத்தவேண்டும்.

## "ஆண்டுதோறும்
# 600 தமிழாசிரியர் பயிற்றுவிக்கப்படவேண்டும்"
### பண்டிதர் பிரேரணை முன்னறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பயிற்றப்பட்ட தமிழாசிரியர்கள் போதியளவு இல்லாத குறையினை நீக்கும் பொருட்டு 600 ஆசிரியர்களை ஆண்டு தோறும் பயிற்றுவிக்கவேண்டும் என அரசைச் கோரும் தனிநபர் பிரேரணை ஒன்றுக்கு ஊர்காவற்றுறைத் தொகுதி உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

இவர் அத்துடன் மேலும் இரு பிரேரணைகளுக்கும் முன்னறிவிப்புச் செய்துள்ளார். ஏனைய மதத்தவர்களுக்கு இருப்பதுபோல் வெள்ளிக்கிழமைகளில் இந்துக்களுக்கு இரு மணித்தியால சமய வழிபாட்டுக்கான லீவு வழங்கப்படவேண்டும்எனவும் யாழ்ப்பாண வளாகத்தில் மருத்துவம், பொறியியல், நுண்கலைப் பிரிவுகள் உடனே தொடங்கப்படவேண்டுமெனவும் இரு வெவ்வேறு பிரேரணைகளை இவர் தேசியப்பேரவையில் கொண்டு வர முன்னறிவிப்புச் செய்துள்ளார். (கி-அ)

### நியமனம்

[கொழும்பு]

கொழும்பு மாநகரசபையில் உள்ளூராட்சி அமைச்சரின் புதிய திட்டத்தின் கீழ், திரு. மா.குலேந்திரன் இணைப்பு அதிகாரியாக உள்ளூராட்சி அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளார். திருநெல்வேலி காளி கோவிலடியைச் சேர்ந்த இவர் இலங்கை இலக்கியப் பேரவை, இலங்கைப் பல்கலைக்கழக [வெளிவாரி] சட்ட மாணவர் மன்றம் ஆகியவற்றின் தலைவருமாவார். [அ]

### டாக்டரை

1.ம் பக்கத் தொடர்ச்சி

யும் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் காயம் விளைவித்ததாக பொ.சுந்தரமூர்த்தி என்பவர் மீது பொலிசாரால் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மேல்நீதிமன்ற நீதிபதி ஜனுப் அப்துல்காதர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

டாக்டர் வெற்றிவேலுவும் எதிரியான சுந்தரமூர்த்தியும் மற்றும் சாட்சிகளும் சாட்சியமளித்த பின்னர் எதிரியைக் குற்றவாளியாகக்கண்ட நீதிபதி எதிரியை 19ந் திகதிவரை விளக்கமறியலில்வைத்து தீர்ப்பு வழங்குவதையும் ஒத்தி வைத்தார்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

யாழ். திறந்த வெளியரங்கையும் இலகுவில் பயன்படுத்த உதவ முன்வரவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

ஃ ஃ ஃ

மாநகர ஆணையாளருக்கு இது அர்ப்பணம்.

- ஊர்சுற்றி

# யாழ். ஆசனக்கோவில் உற்சவம் இன்று

அன்னைமரி என்றதுமே அவளின் அருள்செயல்கள்- அற்புதச் செயல்கள்தான் அடியார்க்கு நினைவுவரும். அவ்வளவு தூரம் அன்னைமரி அண்டி வரும் அடியார் இன்னல் நீங்கிடும் அன்பின் ஊற்றாகக் காட்சி நல்குகின்றாள்.

அன்னை மரியைப் பொறுத்த மட்டில் அவளின் மூன்று பிரதான இயல்புகள் கிறிஸ்தவர்கள் விசுவாச சத்தியங்களாக ஏற்றுள்ளவர். முதலாவது அன்னைமரி மாசில்லாமல் (ஜென்ம பாவமில்லாமல்) அவதரித்தாள். இரண்டாவது கன்னிமைக்குப் பழுதின்றியே இறையருளால் கருத்தரித்தாள். மூன்றுவது ஆன்ம சரீரத்துடன் விண்ணகத்திற்கு அவள் எடுத்துக்கொள்ளப்பட்டாள். இந்த மூன்று உண்மைகளையும் உளஐயமின்றி கிறிஸ்தவர்கள் முழு விசுவாசத்துடன் ஏற்றே அன்னையின் அடி தொழுகின்றனர்.

1854ம் ஆண்டு மார்கழி 8ந் திகதி 9ம் பத்திநாத பாப்பரசர் அன்னைமரி மாசில்லாமல் உற்பவமானுள் என்னும் அமல உற்பவ சத்தியத்தைப் பிரகடனம் செய்தார்.

சரியாக நூறு ஆண்டுகளின் பின் 1954ல் பிரான்ஸ் நாட்டு லூர்த்துநகரில் பிரனீஸ் என்னும் மலையடிவாரத்திலுள்ள மசபியேல் கெபியில் புனித பெர்னடேட் என்னும் ஏழைச் சிறுமிக்கு அன்னை காட்சிதந்தாள்.

இவ் அமல உற்பவ அன்னையின் பெயரால் யாழ்.மண்ணில் அமைந்துள்ள ஒரே ஆலயமான 'கொஞ்சேஞ்சி' மாதா கோவில் யாழ் மறைமாவட்டத்தின் தலைமை ஆலயமாகவும் அமைந்துள்ளது. இன்று இவ் ஆலயத்தில் அன்னை மரியின் இவ் விழா பெரும் பக்திப் பரவசத்துடன் கொண்டாடப் படுகிறது.

—பற்றிமாகரன்

### வடக்கு...

1-ம் பக்கத் தொடர்ச்சி

[illegible]லர் இன்னும் வேலைக்குத் [illegible]ரும்பவில்லை. இவர்களுக்கு அக்டோபர் 31ந் திகதிவரை விசேடலீவு சம்பளத்துடன் வழங்கவேண்டும். இவர்களுக்கு நியாயமான இடமாற்றம் வழங்கவேண்டும். இவர்களுக்கு வழங்கப்படவிருந்த 3 மாத முற்பணம் இன்னும் வழங்கப்படவில்லை' என்று கூறினார்.

'சேருவில தொகுதியில் 12,600 சிங்கள மக்கள்வாழும் பகுதிக்கு சிங்கள மாவட்டம் இருப்பதால், தமிழர் வாழும் ஈச்சிலம்பத்தை கிராமத்தை தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவாகப் பிரிக்கவேண்டும், அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனைப்பிரிவை தனியான மாவட்டமாகவும், நிந்தவூர், சம்மாந்துறை, காரைநகர் பிரிவுகளை தனித்தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவாகவும் பிரிக்கப்படவேண்டும்,,என்றும் அவர் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு தேசிப்பேரவை உறுப்பினர் திரு. எஸ். எம். செல்லத்தம்பு பேசுகையில், முல்லைத்தீவு தனிமாவட்டமாக பிரிக்கப்படவேண்டுமென்றார்.

தற்போது மன்னார் மாவட்டத்துடன் உள்ள மாந்தைப் பிரிவையும் யாழ். மாவட்டத்துடன் உள்ள துணுக்காயையும் வவுனியா அரசாங்க அதிபர் பிரிவுடனும் இணைக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். [ம

### வானொலியில்

விநாயக சஷ்டியை முன்னிட்டு, நாளை வெள்ளிக்கிழமை இரவு 7.35 முதல் 8.00 மணி வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் 'அருள் அமுதம்' நிகழ்ச்சியில், திரு. க. உமாமகேஸ்வரனின் 'வேழமுகத்தண்ணல்' இடம்பெறுகிறது.


# பொதுக்கூட்ட அறிவித்தல்

வரவு-செலவுத் திட்டம், தொழிற்சங்க உரிமைகளை நசுக்க அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை, ஆசிரியர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் ஆகியவற்றை ஆட்சேபித்து, யாழ். மாவட்ட ஆசிரியர்களின் பொதுக்கூட்டம் நல்லூர் கல்யாண மண்டபத்தில் 12-12-77 திங்கட்கிழமை மாலை 3-30 மணிக்கு நடைபெறும்.

ஆசிரியர் சங்கத் தலைவர்களான எச். என். பெர்னாண்டோ, என் பாலசுப்பிரமணியம், எஸ். ஆரியவன்ச உட்படப் பல தொழிற்சங்கப் பிரமுகர்கள் உரையாற்றுவர். —யாழ். மாவட்ட ஆசிரியர் சங்கம்.

7869


## நாடும் நடப்பும்

இந்தியாவே இந்திரா என்ற நிலையிலிருந்த திருமதி இந்திரா காந்தியின் நிலை இப்போது பரிதாபம். ஷா கமிஷன் முன் அவர் தோற்றிச் சாட்சியம் அளிக்கமறுத்துவருகிறார். ஆனாலும் அவரை விடமாட்டார்கள் போல் தெரிகிறது.

இங்கு நமது நாட்டிலும் முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவுக்கு எதிராக உள்ளூராட்சி, கட்டட நிர்மாணத்துறை அமைச்சர் பேரவையில் இருபத்தெட்டுக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தினார்

இது போதாதென்று காணி விவசாய அமைச்சர் பேரவையில் கூறியதற்கு மறுப்புத் தெரிவிக்கும் அறிக்கையைத் திருமதி சிறிமா பேரவையில் விடுக்கப் போய், அது மேலும் சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது.

இங்கும் முன்னைய பிரதமர் மற்றும் அமைச்சர்கள் சிலரின் நடத்தை பற்றி விசாரிப்பதற்குக் கமிஷன் நியமிக்கப்படவிருக்கிறது

இந்திய விவகாரங்களையும், இங்கு கூறப்படுபவைகளையும் கேள்விப்படும்போது இப்படியும் நடந்திருக்குமா? என்று ஆச்சரியப்படவேண்டியிருக்கிறது.

ஃ ஃ ஃ

திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் மூத்த புதல்வி சுனேத்ராவை விவாகரத்துச் செய்வதற்கு அவரது கணவர் திரு குமார் ரூபசிங்கா தாக்கல் செய்திருந்த மனுவை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, விவாகரத்துக்கு அனுமதி வழங்கியிருக்கிறது. விவாகரத்துக் கோரிக்கையைத் திருமதி சுனேத்ரா எதிர்த்து வழக்காடவில்லை.

ஃ ஃ ஃ

அச்சுவேலியிலிருந்து அன்பர் புத்தொளி பின்வருமாறு எழுதுகிறார்.

யாழ். நகரில் கலை நிகழ்ச்சிகளையும் - பொது நிகழ்ச்சிகளையும் நடாத்துவதற்கு வசதியான - வாய்ப்பான இடமாகத் திகழ்ந்த திறந்தவெளி அரங்கு பல வருட காலமாக நிகழ்ச்சிகள் எதற்கும் பயன்படாமல் இருக்கின்றது.

சில வருடங்களுக்கு முன், பௌர்ணமி விழாவென்றும், நாடகக் கலைவிழாவென்றும் அடிக்கடி யாழ். பொதுமக்களுக்கு நல்விருந்து பெற உதவிய இவ்வரங்கு தற்போது பூட்டப்பட்டிருப்பதால், யாழ். பொதுமக்கள் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

நல்லூர் கல்யாண மண்டபத்தின் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதால், அம்மண்டபம் கலை நிகழ்ச்சிகளுக்கும் பொது நிகழ்ச்சிகளுக்கும் பயன்பட்டு வருகிறது. ஆனால் இங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளை முற்றுமுழுதாக யாழ். மக்கள் அனுபவிக்க முடியாதவாறு போக்குவரத்து வசதிக் குறைவு ஏற்படுகிறது.

நல்லூர் கல்யாண மண்டபத்தைக் குறைந்த கட்டணத்தில் உபயோகிக்க உதவிய மாநகரசபை ஆணையாளர்,

4ம் கலம் பார்க்க

### மதிப்பீடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் நிரப்பி, இம் மாதம் 19ம் திகதிக்கும் 26ம் திகதிக்குமிடைப்பட்ட காலத்தில் பத்திரம்பெற்ற கடையில் ஒப்படைக்கவேண்டும். இதற்காக 12ம் திகதி முதல் 26ம் திகதிவரை சம்பந்தப்பட்ட கடைகள் தினசரி காலை எட்டு மணி முதல் மாலை 6 மணி வரை திறந்திருக்கும்.''

மேற்படி தகவலை வெளியிட்ட உணவுக் கூட்டுறவுத் துறை அமைச்சு, ''புதிய முறை அமுலுக்குவரும்வரை தற்போதைய பங்கீட்டுமுறை தொடர்ந்திருக்கும். [ம]

இப்பத்திரிகை 'ஈழநாடு. லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as News paper in Sri lanka